# விவேகபாநு.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு—திருக்குறள்.

வால்யூம் I] நவம்பர்மீ 1-உ [புத்தகம் 3

அருணெறி தயம்வாழ்க வாக்கறிவென் றென்று
மிருணீக்கி யின்பத் தெழுக—கருணைக்
கணபதிசி ரோங்கக் கலைக்குவரம் பாக
குணகடர்க்கட் டேத்துக்குடி.

## அறிவு.

உலகத்துப் பொருள்கள் பல. அவற்றுட் சிலவும் பலவும் இயன்றவரையில் அறிகின்றோம். அறியினும், அவற்றின் பொதுவியல்பு தானும் முழுதுமறிவது பெரிதும் அரிதாகின்றது. அவற்றின் சிறப்பியல்பு ஒரு சிறிதாயினும் அறிவது அதனினும் அரிதாகின்றது. அறிவதும் பொறிகளான் அறிவதும், உள்ளத்தான் அறிவதுமுதற் பலவகைப்படுகின்றது. ஒன்றா னறிவதை மற்றொன்றா னறிவதும் அரிதாகின்றது. இவ்வாறாயினும், அறிதல் என்பது தாழ்த்தாயினும் விரைந்தாயினும், ஏறவாயினும் குறைவாயினும், ஐயந்திரிவுபடவாயினும் அவையின்றியாயினும், தூங்கும்பொழுதும் விழிக்கும்பொழுதும் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றதென எனக்குத் தோற்றுகின்றது. இது யாது? இதனையே போலும் உலகம் அறிவென்பது.

இவ்வறிவு கருவியாகப் பலவும் பலபடியாய் அறிகின்ற நாம் இவ்வறிவின் பொது உண்மை இயல்புகளை உள்ளவாறறிந்துகொள்வது மற்றெல்லாவற்றினும் அரிதாகின்றது.

மற்றெல்லாவற்றையும் இவ்வறிவு கருவியாக அறிகின்ற நாம் இவ்வறிவை யறியலுற்றால் வேறு எக்கருவிகொண்டறிவது? கட்புலனாதற்

குரிய பொருள்களைக் கதிர் கருவியாகக் காண்கின்ற நாம், கதிரையும் அக்கதிர் கருவியாகவே காண்கின்றோம். அதுபோல அறிவும் அவ்வறிவு கருவியாகவே அறியப்படும்போதும். அங்ஙனம் அறியுமிடத்து, அறிஞர்கள் பலரும் அவ்வறிவொன்றனையே பற்பலபடியாய் அறிகின்றார்கள்.

சிலர் "அறிவு மஞ்சளுஞ் சுண்ணாம்புங்கூடிய கூட்டத்தாலாகி, அவற்றின் வேறாய்த் தோன்றுஞ் சிவப்புப்போல, உடம்பின் கூறுகள் பலவற்றின் கூட்டத்தாலாகி, அவ்வுடம்பின் வேறாய்த் தோன்றி, அவ்வுடம்பிற்றானே நிலைபெறுவதொன்றென்றும் அவ்வுடம்பு அழியும்பொழுது அவ்வுடம்போடு கூடவே அதுவும் அழிந்துவிடு" மென்றுஞ் எண்ணுகின்றார்கள்.

சிலர் "அது பொருந்தாது. சிவப்பு மஞ்சளின்கண் முன்னமே அடங்கிக்கிடந்தது. அதுவே சுண்ணாம்பின் கூட்டத்தாற் பின்னர் வெளிப்பட்டது, அத்துணையேயன்றிப் பிறிதில்லை. ஆகலின் அவ்விரண்டின் வேறாய்ச் சிவப்பென மூன்றாவதொன்று புதுவதாய்த் தோன்றுமாறில்லை. மஞ்சளின்கட் சிவப்பின் கூறுளதாதலைக் கண்கூடாகக் காட்டவும்படும். உடம்பின் கூறுகள் பலவற்றுள்ளும் யாதானு மொன்றில் அவ்வறிவின் கூறுளதாதலைக் கண்கூடாய்க் காட்டுதல் ஒருவாற்றானும் இல்லை. அங்ஙனம் காட்டாதவழி, அவ்வுடம்பின் கூறுகள் தம்மிற் கூடுதலால் அறிவென்பதொன்று அவ்வுடம்பின் கூறாய், அவ்வுடம்பின்கண் உண்டாமென்றல் சாலாது" என்றும், "ஆகலான், அவ்வுடம்பின்கண் அவ்வுடம்பை அல்லது உடம்பின் கூற்றை ஒருவாற்றானு மொத்தலின்றி, அவ்வுடம்பின்கண் அறிவென்னுமோர் தனிப்பொருள் வேறுண்" டென்றுங் கருதுவர்.

சிலர் "மெய்யின்றி உறுதல் செல்லாது, வாயின்றி உண்டல் செல்லாது, கண்ணின்றிக் காண்டல் செல்லாது, மூக்கின்றி உயிர்த்தல் செல்லாது, செவியின்றிக் கேட்டல் செல்லாது, இவை ஐந்துமில்வழி அறிதல் என்பதே அமையுமாறில்லை. அறிவின் கூறு உடம்பின்கண் உள்ள இவ்வைந்துறுப்புகளில் ஒவ்வொன்றன் கண்ணும் அமைந்து கிடக்கும். அவை ஐந்தும் அவ்வைந்துங்கூடிய உடம்பென்னுந் தொகுதியின் கண் உளவாகலின், அறிவெனப்படுவதொன்று அத்தொகுதியின் வேறாய் உண்டுபோற் றோன்றினும், அத்துணையேயன்றிப் பிறிதில்லை" என்றுரைக்கின்றார்கள்.

சிலர் "அதுபொருந்தாது. மஞ்சளுஞ் சுண்ணாம்புந் தம்மிற் கூடாதவழியும் மஞ்சளிற் சிவப்புண்மை தெளியப்படுதல்போல, அவ்வைந்துந் தம்மிற் கூடாதவழியும் அவற்றின் கட்டனித்தனி அறிவுளதாதல்

தெரியப்படாமையானும், அவ்வைந்தும் ஒன்றறிவ தொன்றறியாமையானும், ஒன்றறியுங்கா லொன்றறியாமையானும், முன்னொருகாலத் தவ்வைந்தனு ளொன்றுபற்றி யறிந்ததனை அதுபற்றாதே பின்னொருகாலத் தறிதலானும், அவ்வைந்தின்கண்ணும் தனித்தனி அறிவின்கூறு அமைந்திடத்தலுமில்லை, அவைதொக்க தொகுதியில் "அதனின் வேறாய் அறிவென உண்டுபோற் றோன்றும்" என்பதும் இல்லை. உண்மையில் அவ்வைந்தின் வேறாய், அவ்வைந்தன்றொகுதியின் வேறாய், அததொகுதியினின்றுகொண்டவ்வைந்தையும் அறிந்து, அவ்வைந்தானும அறியப்படுமென்பவற்றையும் அறிந்து, அவ்வைந்தும் அழியினுந்தானழியாது நிலைபெறுவதொன்றாய், அவ்வைந்தினின்றுந் தன்னைத் தானேபிரித்தறிவதாகிய அறிவு தனியாய் ஒன்று உண்டு" என்றும் ஓர்ந்துணர்கின்றார்கள்.

சிலர் "அறிவென்பதொன்று தனியாயுண்டென்பதொகும். ஆயினும் அது உடம்போடு அல்லது அவ்வுடம்பின் கூறாகிய ஐம்பொறிகளோடு புணர்ந்தல்லதறிதல் அமையா" தென்றெண்ணுகின்றார்கள்.

சிலர் அறிவெனபதொன்று தனியாய் உண்டெனக் கொண்டபின்னர் அதற்கு அறிதல் என்பதொன்றேயன்றி அதன் மறுதலையாகிய அறியாமை யென்பதும் இயல்பென்று கோடல் இயல்பன்று. அறிவுதன்னை நோக்கியும் நிற்கும், பிறவற்றை நோக்கியும் நிற்கும். பிறவற்றை நோக்குங்காற் றன்னைநோக்குதல் விட்டுப்போம். அப்பொழுது பிறவற்றையே கருவியாகக்கொள்ளும். அக்கருவி தன்னின் வேறாயினும அவற்றோடொற்றித்து நின்றேநோக்குதலைவேண்டும். அது அப்பொருள்கள் பரும்பொருள்க ளாதலால் அவற்றை நேரே கருவிசெய்தலின்றி, அவற்றுள்ளும் நுண்பொருள்கள் தனது நுட்பவியல்பிற்கேற்ப ஒருவாறு துணைசெய்து நிற்றலால், அவற்றையே கருவிசெய்துகொண்டு, அவற்றின் வேறாய்நின்றறிவின் அவைசெய்மைத்தன்மைவாய் அவற்றை அறிதலும்விட்டுபோய், அவற்றின் ஒரு நிகரனவாய் அவற்றோ டியைபுடைய வனைப்பரும்பொருள்களையறிதலும் விட்டுப்போமாதலால், அந்நுண்பொருள்களோ டொற்றித்து நிற்றலும் ஒருதலையாதல் பற்றியேயாம். அந்நுண்பொருள்கள் அவ்வைம்பொறிகளினும் அமைந்திடக்கும். அவற்றையேபோலும் புலனென்பதூஉம். இனி, அறிவு தன்னை நோக்கி நிற்கும்பொழுது தன்னையேயறிவதல்லது பிறிதொன்றனையும் அறிவதில்லை, அப்பொழுது அவ்வறிவின் நிகழ்ச்சி பிறிதொன்றினுங் காணப்படுதலும் இல்லை. அங்ஙனங் காணப்படாமையான் அப்பிறிதொன்றுபற்றி அவ்வறிவிற்கு அறியாமையும் இயல்பென்பது பொருந்தாது. துயிலின்கண் அறிவு நிகழ்ச்சி ஐம்பொறிகளினுங் காணப்படுதலில்லை, என்னை? ஐம்புலனையும் அது நுகர்

தல் செல்லாமையின். துயில் நீங்கியபின்னர்த் துயிலின் முன்னறிந்தனவும், துயிலின் கண்ணறிந்தனவும் ஒருங்கேயறிவதாகிய தொடர்ச்சியுணர்வு நிகழ்கின்றது. ஆகவே அறிவு துயிலின் கண்ணுந் தன் அறிதற்றொழிலை விட்டதில்லையாகலின், அறிவு அவ்வைம்பொறிகளோடு புணர்தலின்றியே யறியும், அதுபற்றி விளைவென்னை'' யென்றொழிந்து, அவரினுஞ் சிறிது கூர்ந்து நோக்குகின்றனர்.

சிலர், "இங்ஙனம் அறிவதற்கெல்லாம் அறிவென் றோர்பெயர் பொதுப்படக் கூறுதலமையா" தென்றும், "ஒன்றைப் பொறிகருவியாகப் பற்றுவதும் பற்றியவதனையே நன்று அல்லது அன்றெனத் துணிவதும், துணிந்ததனைவிட்டுவிடாது யாண்டுந் தன்னிடத்தேவைத்துக்கொள்வதும், வைத்துக்கொண்டதைத் தனக்குரியதென்றுகொண்டு, அதுபற்றி யெழுவதுமாகிய உட்கருவிகள் பலவுமுளவென்றும், அவை கருவியாக அவற்றை யெல்லாந் தானே செய்து, அவற்றையும் அவைபோல்வனவற்றையு மியக்கி, அவற்றின் வேறாய்த் தனித்து நிற்பதொன்றுண்டென்றும், அதுவே உயிர் என்றும, அதனையே அறிவென்று கோடல்வேண்டுமென்றும், அங்ஙனமன்றி. உயிர் அவ்வுட்கருவிகளோடொற்றித்து நிற்றலால் அவற்றையும் அறிவென்று கோடல் பொருந்தாதென்றும் அவணாயு நோக்கலின் னுஞ் சிறிது கூர்ந்து செல்கின்றனர்.

சிலர், அவவுட்கருவிகள் அவ்வுயிரின் வேறுவன அல்ல, கடலின் எழுகின்ற திரை, நுரை முதலியன அக்கடலின் வேறுவனவல்ல வதுபோலு மென்று ஒப்பிக்கின்றார்கள்.

சிலர் உயிர்க்குப் பிறிதொன்றனையு மவாவுதலின்றித் தானேயனைத்தையுந் தனித்துணரு மாற்றலின்மையானும், உடம்பு முதலிய பொருள்களாற்றுவகைகுண்டு தன்றிறமின்றி நிற்றலானும், அவ்வுயிர் அறிவுடைப் பொருளேயாயினும் அவ்வுயிர்க்கு மேலாய், அவ்வுயிருடனே ஒற்றித்து நின்றுகொண்டவ்வுயிர் தன்னையும் பிறிதையும் அறியுமாறு தானுமறிந்து தனையுமறிவித்து, அதனுடனைத்தையுமியக்கி, பிறிதொன்றனையுமவாவுதலின்றி, தானேயனைத்தையும் அறிந்தாங் கறிவதொன்றுண்டென்றும், அதுவே அவ்வுயிர்க்குயிராறிவுக்கறிவென்றும், அதுவே உட்கருவிகள் புறக்கருவிகள் முதலியவனைத்தையுங்கடந்து நிற்றலாற் கடவுளெனவும் படுமென்றும், அக்கடவுடுணையாக அவ்வுயிரறிந்தாலல்லது அவ்வுயிர் உண்மையறிவுடையதாதல் ஒருவாற்றானு மில்லையென்றும் துணிகின்றார்கள்.

சிலர், அக்கடவுட்பொருளன்றி வேறுபொருளுலகத்தில்லை யென்றும், உண்டென்றல் மயக்கவுணர்வென்றும், உயிரென்பது குடநீரிற்றோன்றுங் கதிரவனிழல்போலு உடலின்கட்டோன்றுங் கடவுணிழலென்றும்

ஆகலின் அவ்வுயிர்க்குங் கடவுட்கும் வேறுபாடின்றென்றும், கதிரவனி லாழ்ந்து நோக்குவார்க்குக் கதிரவனேயாதல்போலக் கடவுணிழ்ந்தும் உற்றுநோக்குவார்க்குக் கடவுளேயாதலமைவுடைத்தென்றும், உயிருமொன்றே அறிவுமொன்றே என்றும் முடிவுசெய்கின்றார்கள்.

சிலர் "கடவுளும் வேறு, உயிரும் வேறு, உலகமும் வேறு. அம்மூன்றும் எப்பொழுதும் உள்ளன. கடவுளும் அறியும், உயிரும் அறியும். கடவுள் தானே அறிந்தாங்கறியும், உயிர் அங்ஙனமறியாது. அஃதொன்றைப்பற்றிட உயிர்க்குத் தன்றிறமென்பதே இல்லையென்றுகொண்டு, அதனால் அது தானுமறியமேயில்லையெனபது பொருந்தாது. அது தானுமறிவதொன்றில்லையாயின் கலைநூற்றறிதலும், ஒருநெறி நிற்றலும், அதன் பயன் அவ்வுயிரே நுகர்தலும் இல்லை. ஆதலால் அதன் தன்றிறமுடைமையும் அளவுபட்டது, அதுபோலவே அதனறிவும் அளவுபட்டது" என்கின்றனர்.

சிலர் அவற்றை அளவுபட்டதென்பதென்னை? அவை சிறிது சிறிதாய் வளர்ந்து பின்னர் நிறைந்துவிடுமென்கின்றனர்.

சிலர் நிறைவு இன்னதானென்பதூஉம், நிறைந்தபின் இனிதுசெய்யுமென்பதூஉம் இப்பொழுதே கருதியுணரவாராமையின் அவை வளர்ந்துகொண்டே போவதுதான அவ்வுயிரின் விளக்கமுமின்பமுமாமென்றுங் கூறுகின்றனர்.

சிலர், புற்பூண்டு மரமுதலிய நிலையியற்பொருள்கட்கும் உயிரும் அறிவுமுண்டென்று நினைக்கின்றார்கள். அதுபற்றி, உயிரையும் ஆருக்கின்றனர்.

சிலர், உயிருடையனவெல்லாம் அறிவுடையனவாதல்வேண்டுமென்பதொன்றில்லை. பறவை, விலங்கு முதலிய இயங்கியற்பொருட்கும் உயிருண்டு, அறிவில்லை. அவை கூடுகட்டுதல் முதலியன அவற்றின் கூட்டத்திற்கெல்லாம் பொதுவாயுளதாய தோராற்றலேயன்றி அறிவன்றென்கின்றார்கள்.

சிலர் அதுவுங்கடவுளாற்றலே என்கின்றார்கள்.

(மற்றவை பின்)

தி. பா. சிவராமபிள்ளை.

# இல்லறதர்மம்.

அறமென் ஆன்றோர்களால் வகுக்கப்பட்டது இல்லறம் துறவறம் எனஇருவகைப்படும். இல்லறமாவது கணவன் மனைவியாகிய இருவர்களும் மனமொத்துச் செய்யும் தர்மம். துறவறமோ அகப்பற்றாகிய நான் என்பதையும், புறப்பற்றாகிய எனது என்பதையுந் தவிர்த்து மனது சிவத்தினிடம் பொருந்துமாறு செய்யுந் தர்மம். மேற்கூறியவிரண்டறங்களுள், துறவறமானது செய்வதற்கருமையாயும், வேதவித்துக்களாயுள்ளவர்கள் புகழப்பெற்றதாயு மிருந்தபோதிலும், இல்லறமே துறவறத்தைவிட மேம்பாடுடையதென்று ஆன்றோர்களால் நன்குமதிக்கப்பட்டு வருகின்றது. ஏனெனின், துறவறத்தைச்சரிவர அனுட்டிப்பவன் எந்தப்பதவியை யடைவானோ, அதேபதவியை இல்லறத்தினின்று அனுட்டிப்பவனுமடைகிறான். அதனாலன்றோ துறவறமே பூண்டொழுகிய நம்ஞானத்தாயாகிய ஔவையும் 'இல்லறமல்லது நல்லறமன்று' எனத்திருவாய்மலர்ந்தருளினார். இல்லறமல்லாத எவ்வகைத்தருமமும் நல்லதர்மமல்ல எனும் ஔவையின் உறுதிமொழி, இல்லறமானது ஏனையறத்திற்குப் பற்றுக்கோடாதலின் அன்றோ?

'இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்றதுணை'

என்றபடி இல்லறத்தான் தரும வியல்பினையுடைய ஏனையமூவர்களாகிய பிரமசாரிகளும், வனத்திற் சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யுமொழுக்கத்தார்களும், முற்றத்துறந்த யோகவொழுக்கத்தார்களும், தத்தம் நெறிகளை வழுவின்றி முடியச்செல்லுமளவும், அவர்கட்கு இன்றியமையாத்துணையாயிருக்கின்றான். இந்நீதியை நோக்குங்கால், இல்லறமானது மேற்கூறிய மூவர்களையும், நற்கதியில் நாட்டுகின்ற நன்னெறியாயும், சகலவித தர்மங்கட்கு வித்தாய மிருக்கின்றது.

'வையத்துள்வாழ்வாங்கு வாழ்பவன்வானுறையுந்
தெய்வத்துளவைக்கப்படும்'

என்றபடி இல்லறத்தான் பூலோகத்தானே யெனினும், வானின்கண் வசிக்கும் தேவர்களுள் ஒருவனாக நன்குமதிக்கப்படுகிறான். இனையபற்பல காரணங்களால் இல்லறமானது மேம்பாடுடையதென்பது யாவர்க்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்குபுலப்படும்.

இவ்வில்லறதர்மம் இத்தகைய பெருமையெய்தற்கு மூலகாரணம் கற்பிற்சிறந்த மனைவியேயாம். கற்பின்வலிமையை யார்தான் இவ்வளவென்று எடுத்துரைக்கக்கூடும்? ஒருகால் நாரதமகாமுனி, அத்திரி ரிஷியின்பத்தினியாகிய கற்பிற்சிறந்த அனுசூயையம்மாளிடம் நிர்வாணபிக்ஷை கேட்க, அம்மாது சிரோமணி, ஒருவர் கையிலேயுஞ் சிக்கிக்கொள்ளாத நாரதமாமுனிவரைப் பெண்ணுருவாக்கித், தன் கற்பழியாது அவர் வேண்டுகோளின்படி பிக்ஷையளித்ததும், வனத்தின்கண் வேடனொருவன், நளமகாராசன் மனைவியாகிய தமயந்தியின் பேரழகைக்கண்டு மோகித்து இம்சைசெய்யும்போது, அவ்வுத்தமி உற்றுநோக்க, உடனே வேடன் சாம்பராய்ப்போனதும், திரௌபதையின் துகிலை அவள் கணவர்க்கு முன்பாகச்சபையில், பாவி துச்சாதனன் உரியுங்காலத்தில், துகிலானது உரியவுரிய வளர்ந்துகொண்டிருந்ததும், அவ்வுத்தமிகள் வாய்ந்த கற்பின் வலியன்றோ? அம்ம! அம்ம!! கற்பின் வலிமை கரைகடந்தது. இதைப்பற்றி விரிக்கப்புகின் விரியுமாதலால், இம்மட்டோடே நிறுத்தினோம்.

‘பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந்
திண்மையுண்டாகப்பெறின்’

என்றபடி கற்பென்னுங் கலங்கா நிலைமையிருக்கப்பெற்ற ஓர் பெண்ணை மனைவியாய் அடைவதைப்பார்க்கிலும், புருடனுக்கு இவ்வுலகில் மேம்பட்ட பொருள்யாவையுள? மேலும்,

“கற்புமேய கனங்குழை மாதரைப்
பெற்றுளோர்தம் மரபும் பெருந்தவக்
கற்பினர்கொண்ட காதல ருருயிர்ச்
சுற்றம்யாவுந் துறக்கத்தி னெய்துவார்”

என்பதில் (காசிகாண்டத்தில்) கற்புவாய்ந்த புண்யவதிகளைப் பெற்றவர்களின் சுற்றத்தார்களும், அப்புண்யவதிகளை மனைவியாகவடைந்த புருஷர்களின் சுற்றத்தார்களும், சுவர்க்கத்திற் சென்று சகல பாக்கியங்களையும் அடைவார்களெனக் கூறியிருத்தலால், அப்புண்யவதிகள் மக்களாகவந்து வாய்ப்பதும், மனைவிகளாக வந்து வாய்ப்பதும் பூர்வஞ்செய்த நல்வினைப் பயனாயிருத்தல்வேண்டும்.

இனி, இல்லறதர்மத்தை யாம் சரிவர நடத்துதற்கு இன்றியமையாத்துணையாயிருப்பவள் இல்லாளென யாவரும் எளிதில் சொல்லக்கூடுமல்லவோ? ஆகையால், அவள் கன்னிப்பருவந்தொடங்கி முதுமைப் பருவமுடியுமளவு நடந்துகொள்ளவேண்டிய விதத்தையும், அவளை அங்ஙனம் நடப்பிவிக்கவேண்டிய விதத்தையும், இல்லறதர்மத்தின் வழிகளையும்

நாம் கடைப்பிடித்துக்கொள்வது அவசியமன்றோ? ஆகையால் அவைகளைப் பற்றித் திருவருள் தோற்றுவித்தவண்ணம் ஒருவாறு எழுதப்படும்.

"மங்கையை வாழுநாளில் மணமொழி பிதாவே காப்பான்
பொங்கிய யௌவனத்திற் பொருந்துபத் தாவே காப்பான்
தங்கிய மூப்பி லேதன் தனயனே காப்பானன்றிச்
சங்கையா மெக்காலத்துஞ் சுதந்தரமில்லை மாதே".

என்ற நீதிசாரத்திற்கிணங்கப் பெண்களாய்ப் பிறந்தவர்கள், கன்னிப்பருவத்தில் தாய் தந்தையர் ஆதீனத்திலும், விவாகமானபிறகு கணவன் ஆதீனத்திலும், கணவர்க்குப்பிற்காலம் புத்திரர் ஆதீனத்திலும் இருக்கவேண்டியதேயல்லாமல், அவர்கள் ஒருபொழுதுஞ் சுதந்தரமாயிருக்கலாகாது. பெண்களுக்குங் கன்னிப்பருவத்திலேயே, தாய் தந்தையர்கள் தங்கள் ஆண்குழந்தைகளைப்போலக் கல்விப்பயில்விக்கவேண்டும். ஏனெனின் இப்பருவந் தப்பினால் மற்றெப்பருவத்திலும் கல்விபயில்வது மிகவும் அசாத்தியமாகும். ஒளவையுமன்றோ 'இளமையிற்கல்' என்றார். இளமைப்பருவந் தான் கல்விபயில்வதற்கேற்றகாலம். இளமைப்பருவமானது சுறுசுறுப்பும், சோம்பலின்மையும், ஞாபகசக்தியும், கவலையின்மையும் உடையது. ஆகையால் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்றபடி காலத்தை வீணாய்ச் செலவிடாமல், குழந்தைகளைப்பால்யத்திலேயே படிப்பிக்கவேண்டும். மேலும் கல்வியானது ஆண்குழந்தைகட்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு பெண்குழந்தைகட்கும் அவசியம். ஏனென்றால் அதுதான் மரியாதை முதலிய நன்மைகளைச்செய்ய அவர்களைத் தூண்டிவிடும். தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார், அரசியலின் முதலில் இறைமாட்சியை ஓர் அதிகாரத்தாற் சொல்லி, அதனையடுத்து, கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமையாகிய நான்கையும் நான்கு அதிகாரங்களால் கூறிக் காரணகாரிய முறைமையாகக் கல்வியின் பெருமையைக் கட்டுரைத்தார். ஆதலால் குடும்பமெனனும் அரசியலை நடத்தப்போகிற பெண்ணாகிய இறைவியின் மாட்சிமைக்கு, இன்றியமையாதது கல்வியல்லவோ? இத்தகைய பெருமையுடைய கல்வியானது பெண்களுக்குத் தருமத்தையும், பொருளையும், இன்பத்தையும், மோட்சத்தையும் கீர்த்தியையும் தந்து, ஆபத்துவந்தபோது கவலையை நீக்கித்துணையாயிருக்குமல்லவா? ஸ்திரீயானவள் தாம் அடையும் நாயகர்கள் வீட்டுக்கு அரசியாகையின் அரசிக்குரிய அங்கங்களெல்லாம் அவசியம் அமைந்திருக்கவேண்டும். அவை, இறைமாட்சி, பெரியாரைத்துணைக்கோடல், சிற்றினஞ்சேராமை, தெரிந்து செய்யுந்திறம், தெரிந்து தெளிதல், சுற்றந்தழுவுதல், மறவாமை, தாக்ஷிண்யம், ஊக்கமுடைமை, இடுக்கணழியாமை முதலியவைகளாம்.

1. இறைமாட்சி:— இல்லறத்துக்குத் தகுந்த வளம், மாட்சிமை, கற்பு முதலிய குணங்கள் உடைத்தாயிருத்தல். இறைமாட்சியென்பதை இறைவியின் மாட்சியெனக்கொள்ளவேண்டும்.

2. பெரியாரைத்துணைக்கோளல்:—பெரியவர்களாகிய மணவாளன், மாமி, நாத்தனார், மாமனார்கள், கொழுந்தன் முதலியவர்களைத்தான் செய்யும் இல்லற அரசுக்கு இன்றியமையாத துணையாகக்கொள்ளல்.

3. சிற்றினஞ் சேராமை:—கோள் சொல்வதே குலவிருத்தியாகவும், பல பண்டங்களைப் பிடுங்கித்தின்னுவதே பெரிய உத்தியோகமாகவும், முகஸ்துதியும் புறங்கூறுவதுமே முக்கிய கடமையாகவுமுள்ள அயல் வீட்டுக் குண்டுணி மாதர்களைச் சேராதிருத்தல்.

4. தெரிந்து செய்யுந் திறம்:— கணவன், மாமி, மாமனார் முதலியோர்களுக்குத் தக்க பணிவிடை முதலியவைகளை ஆராய்ந்து அமைந்து அவர்களும் இவளைப்போலத் தேடக்கிடைப்பாளோ என்றுசொல்லும்படிசெய்தல்.

5. தெரிந்துதெளிதல்:—எந்தெந்தக்காரியத்தை எந்தெந்தக்காலத்தில் எவ்வெப்படிச் செய்யவேண்டுமோ, அந்தந்தக்காரியத்தை அவ்வப்படிச் செய்வதற்கு முந்தி ஆலோசித்துப் பின்பு செய்தல். 'துண்ணிய கருமமும் எண்ணித்துணி' என்றபடி ஒரு சிறியகாரியமாயினும் ஆலோசித்துச் செய்யவேண்டும். அதாவது மழைகாலத்துக்கு வேண்டியவைகளை வெயிற்காலத்திலும், வெயிற்காலத்திற்கு வேண்டியதை மழைகாலத்திலும் தெரிந்து சம்பாதித்துவைத்தல்.

6. சுற்றந்தழுவுதல்:—இவர் ஏழைகளென்றும், இவர் செல்வரென்றும் எண்ணாமல், தன் சுற்றத்தாரைச்சேர்ந்து வாழ்தல். ஏழைகளானால் நீக்குவதும், செல்வரானால் கொள்வதுங்கூடாது. ஏழைகளேபின் செல்வராவார், செல்வர்களே பின் ஏழைகளாவார் என்பதை நாம் பிரத்தியக்ஷமாய்க்காண்கிறோம்.

7. மறவாமை:—எந்தெந்தக்காரியம் யார் யார்க்குச் செய்யவேண்டியதோ அதை அவ்வவர்க்குச் செய்ய மறவாதிருத்தல்.

8. தாக்ஷிண்யம்:—தன்னோடு பழகினவர் தங்களுக்கு முட்டுப்பட்ட பதார்த்தங்களைக் கேட்டால், அவைகளை மறுக்காமல் கொடுத்தல்.

9. ஊக்கமுடைமை:— நற்காரியங்கள் செய்வதில் மனஞ்சலியாதிருத்தல்.

10. இடுக்கணழியாமை:—மாமி, நாத்தனார் முதலியவர்கள் செய்யுந் துன்பத்திற்கு மிகவும் மனம்வருந்தாமை.

மேற்கூறிய பத்துவகை நற்குணங்களைக் கல்வியறிவில்லாமல் அடைவதெப்படி? ஆகையால் ஸ்திரீகட்குக் கல்வியானது இன்றியமையாத் துணையாயிருக்கின்றது. மேலும்,

"மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு."

என்பதில் (சிறுபஞ்சமூலம்) பெண்களுக்குக் கூந்தல் முதலியவைகளால் உண்டாகுமழகு அழகாகமாட்டாதெனவும், சாஸ்திரத்திற்குப் பொருந்தும்படி கல்வியறிவோடு கூறுகின்ற வார்த்தையே அவர்கட்கு அழகு என்று சொல்லியிருத்தலால், தாய் தந்தையர்கள் தங்கள் பெண்குழந்தைகளுக்கு இளமையிலேயே கல்விபயிற்றுவித்து அவர்களை நன்னெறியில் நடந்துகொள்ளுமாறு செய்விக்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

N. சேதுராமய்யர்,

---

## விவேகவிசாரங்கள்.

---

மாயை என்னும் பைசாசமானது தனது நிஜவடிவைக் காட்டாமல் மோகத்தைத் தராநின்ற விஷயங்களென்னும் நானாவித சொரூபங்களைத் தாங்கிநிற்க, அறிவில்லாதமாந்தர் தமது இச்சை என்னும் கரத்தால் அவற்றைப்பற்றி, அநுபவிக்கப்பார்க்கின்றனர். அப்பொழுது மாயையோ தனது துக்கமென்னும் வாயில் அவரைப்போட்டுக்கொள்கின்றது. இவ்வெதார்த்தத்தை உணர்ந்த அறிஞர்கள் மாயாதோற்றங்களாகின்ற விஷயங்களைக் காணுந்தோறும் விவேகமென்னும் மாரணமந்திரத்தைப் பிரயோகிக்கிறார்கள். அதனால் மாயையானது தான் எடுத்த பல வடிவங்களுடன் அக்கினியினால் தகிக்கப்பட்ட வஸ்திரம்போன்று ஆகிவிடுகின்றது.

*
**

ஜென்மம் என்னும் சாகரத்தில் சுழிக்கின்ற இச்சை என்னும் சுழியில் அகப்பட்டமாந்தர், நிராசை என்னும் தெப்பமேறி, சத்குருவென்னும் தீபஸ்தம்பத்தினின்றும் எழாநின்ற ஞானம் என்னும் ஒளிபற்றிச் சென்று ஆனந்தப் பிராப்தியாகின்ற மோக்ஷமென்னும் கரையை அடையுவார்கள்.

குழந்தை தனக்கு இதம்செய்யினும் அகிதம் செய்யினும் தாயானவள் அதனிடத்தில் மாறாத அன்புடையவளாயிருக்கின்றாள். அவளுக்கு அதனிடத்திலுள்ள அன்பு சுபாவமாகவும், யாதொரு பிரயோஜனத்தையும் கருதியல்லாமலும் இருக்கின்றது. அதுபோன்று கடவுளினிடத்திலும் அவருடைய தோற்றங்களாக விளக்குகிற சகல ஜீவர்களிடத்திலும் பக்தர்கள் செலுத்தும் அன்பானது பிரதி பிரயோஜனத்தை நோக்கி உண்டாகாததும் சுபாவமாகவே எழுகின்றதும் ஒருபொழுதும் மாறாததுமாக இருக்கின்றது.

*
**

பூமியானது தன்னைச்சுற்றியுள்ள ஆகாயத்தில் வரநேரும் கல் முதலிய கனத்தபொருள்களைத் தன்னுடைய ஆகர்ஷண சக்தியால் இழுத்துத்தன்னுடன் சேர்த்துக்கொள்கின்றது. ஆனால் தனக்குச் சமீபமாயேனும் ஆகாயத்தில் பறக்கும் நுண்ணிய அணுக்களை அங்ஙனம் செய்வதில்லை. அதுபோலவே ஞானிகளும் (விவேகத்தால்) கனமுடையவர்களைத் தமது சக்தியால் கவர்ந்து தம்மோடு சேர்த்துக் கொள்கின்றனர். ஆனால் (விவேகமில்லாத) பதர்கள் எவ்வளவு சமீபத்திருப்பினும் அவர்களை அங்ஙனம் செய்கிறார்களில்லை.

*
**

தென்னைமரத்தின் மண்டையில் ஓர்வித வண்டு புகுந்து கொள்ளுகிறதுண்டு. அவ்வண்டு மட்டையிலுள்ள குருத்துகளை அரித்துக் கெடுத்துப் போவதினால் மரத்தினுடைய வளர்ச்சி தடைபட்டு, காய்ப்பதும் கெட்டுவிடுகின்றது, ஆனால் அவ்வண்டை எடுக்கத் தெரிந்தவர்களைக் கொண்டு எடுத்துவிட்டால் மரம் முன்போல வளர ஆரம்பித்துச் சீக்கிரத்தில் பலனையும் கொடுக்கும். இதுபோலவே பலமனிதர்களுடைய மண்டையில் அகங்காரமானது புகுந்து அவருடைய விவேகத்தை அரித்துவருகின்றது. அது சாந்தமுதலிய நற்குணங்களைத்தின்று, மனிதனுடைய ஆத்மார்த்த வளர்ச்சியைத் தடுத்து, மோக்ஷபலத்தையும் கெடுத்துவிடுகின்றது. ஆனால் அவ்வகங்காரத்தை எடுக்கத்தெரிந்தவர்களாகிய ஞானிகளைக்கொண்டு அதை எடுத்துவிட்டால் ஆத்மார்த்த வளர்ச்சி ஓங்கி மோக்ஷபலத்தை எளிதில் கொடுக்கும்.

*
**

பூமியின் பலபாகங்களிலிருந்து எண்ணிறந்த நதிகள் சமுத்திரத்தில் வந்துசேர்கின்றன. அவைகள் மூலமாய் எவ்வளவோ ஜலம் நிமிஷந்தோறும் சமுத்திரத்தில் சேர்ந்தபோதிலும் சமுத்திரம் தன்கரையைமீறுமல்

எப்பொழுதும்போல் இருக்கின்றது. ஏனெனில் மேகத்தின் வழியாய்ப் பரோபகார நிமித்தம் வரவுக்குத்தக்கபடியுள்ள ஜலம் செலவாகின்றது; அங்ஙனம்செலவில்லையாயின் சமுத்திர ஜலமுழுவதும் கரையை உடைத்து வெளியில் செல்லுமென்பதில் சந்தேகமில்லை. அதுபோன்று பலவழியாலும் ஊதியத்தைப் பெறுபவர்கள் பொது நன்மையைக்கொடுக்கும் வழிகளில் வரவுக்குத்தக்கபடி செலவு செய்வது உசிதமாகும். அவ்விதம் செலவுசெய்யாமல் லோபத்தினால் பணத்தை இறுகப்பிடித்துவைத்திருப்பின் முழுமுதலும் வெளியே நழுவுகின்றது.

*
**

பேராசை என்னுமாது 'யானை அடைவோம்' என்று இவ்வுலகத்தில் சஞ்சரித்துவருகின்றான். அவளை யாரேனும் விரும்பிச்சேரின் தரித்திரம் என்னுமகவை உடனே ஈன்றுவிடுகிறான். அவளை அறியாமல் சேர்ந்து கெட்டவர்கள் அநேகருண்டு.

*
**

# நான்குடியிருக்கும் வீடு.

(37-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

அது எவ்விதம்நேர்ந்ததென்று எனக்குத்தெரியவில்லை; ஆனால் எனக்குச் சொற்ப ஞானமும் பலமும் புதிதாக உண்டாயிருந்ததென்று கண்டேன். உயர்ந்த கூரையையும் விசாலமான இரண்டு ஜன்னல்களையும் பற்றிய எண்ணம் என்மனதில் எப்பொழுதுமிருந்ததே அதற்குக் காரணமாயிருக்கலாம். அந்த எண்ணமானது "ஒரு நம்பிக்கை"- நல்ல வீட்டைப் பற்றிய நம்பிக்கை—ஆக இருந்தது. அது எப்படியுமிருக்கட்டும்; உண்மையில் எனக்குச் சிறிது பயனுண்டாகியே இருந்திருக்கிறது; ஏனெனில் புதியவீடு கட்டிமுடிந்தபொழுது அதன் கூரை முன்னிலும் நேராயும் ஜன்னல்கள் அகலமாயுமிருந்தன; மேலும் அவ்வீட்டின் மேல்பாகத்தில் மனோகரமும் குளிர்ச்சியும் தரத்தக்க சாம்பல் வர்ணமுள்ள சாமானால் கட்டப்பட்ட ஒரு சிறிய அறையுமிருந்தது. அந்த அறை ஓர் அறையாகவும் அதிலிருந்த சாமான்கள் சிலாக்கியமுள்ளதாகவும் சொல்லத்தக்கனவாயிராவிட்டாலும், இதற்குமுன் நானிருந்த பழையவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் இவைகளே மிகவும் திருப்திகரமானவைகளாயிருந்தன.

இவ்வளவே தாரதம்மியத்தில் எனக்கு மெத்தக் கீழ்ப்பட்டவர்களாயும் என்னால்முன்னமே அறியப்பட்டிருந்திருக்கவேண்டியவர்களாயுமுள்ளவர்களை ஆளுந்தன்மை, எனக்கு இப்போது கிஞ்சித் வாய்த்தமையால்

அவர்களை முற்றிலும் ஆளுந்தன்மையை நான் முன்னதாகவே அடைந்திருக்கவேணுமென்று நீங்கள் நினைக்கக்கூடும் என்னுடைய நேர்த்தியும், மனோகரமும், பிரகாசமுமான சிறிய மேல்வீட்டிலிருந்து என்னை அவர்கள் வசப்படுத்தி யிழுக்கவும் அவர்களுடைய குற்றமும் பாவமுமான செய்கைகளில் என்னையுமுட்படுத்தி மென்மேலும் கெடுக்கவும் நான் இன்னும் அவர்களுக் கிடங்கொடுத்துவிட்டேன் என்று உங்களுக்குச் சொல்லவருவேனானால் அது உங்களுக்கு எவ்வளவு ஆச்சரியத்தையுண்டுபண்ணும்! ஆனால் பின்னுஞ் சொல்லுமெண்ணங்கள் எப்பொழுதும் எனக்கு வந்துகொண்டிருந்ததென்பதை நீங்கள் அறிய, சந்தோஷத்தையடைவீர்கள்:—"நான் எதற்காக இங்கிருக்கிறேன்? இக்கேவல வாழ்க்கையுடைய வேலைக்காரர்களுக்கு இடங்கொடுக்கும்படியாக அவ்வளவு புத்தியீனனாய் நானேன் இருக்கவேண்டும்? ஐயோ! இவ்விழிவானவர்களின் ஆளுகையினின்றும் என்னை நீக்கிக்கொள்ளலாமே".

ஆனால் அவர்களினின்றும் அவ்வளவு எளிதாய் என்னை நீக்கிக்கொள்ளக்கூடாதென்பதும் நான் நிவிர்த்திக்கக்கூடாத ஏதோ ஒரு அந்தரங்கச் சக்தியால் அவர்கள் என்னோடு பந்திக்கப்பட்டிருக்கின்றார்களென்பதும் தோன்றிக்கொண்டிருந்தன. காலமும் கழிந்துகொண்டிருந்தது. வீடு பழையதாயும் ஜீரணித்தும் போய், இடிந்துவிழ ஆரம்பித்துவிட்டது. ஆலையாலதைவிட்டு, வழிதப்பிய நாங்கள் எழுபேரும்வெளியாகிவிட்டோம்.

இதில் மற்றவர்களுக்கு எப்படியிருந்ததோ எனக்குத்தெரியாது. ஆனால் எனக்கோ என்னுடைய தவறுதல்களை நினைத்து மிகவும் வெட்கமுண்டாயிற்று. என் தவறுதல்களையெல்லாம நான் நினைத்துப்பார்க்கக்கூடியவனாயிருந்தேன். வசிக்கிறதற்காக வீடுகட்ட இனிமேல் முயற்சிக்கவேகூடாதென்று நான் அடிக்கடி சொல்லிக்கொள்வேன். இனி எப்போதாவது வீடுகட்டுகிறதாயிருந்தால் என்னுடைய புருஷத்தன்மையை எவ்விதம் உபயோகிக்கவேண்டுமென்றும் வேலைக்காரர்கள் வசிக்கும் கீழ்க்கட்டுக்கு இறங்காமலிருப்பது எவ்விதமென்றும் பின்னும் பின்னும் ஆலோசிப்பதுண்டு. பின்னர் நித்திரைக்குப்போவேன். இவவாறு எத்தனையெத்தனை வீடோ கட்டிக்கட்டி வசித்தும், அழிந்தபின் தவறுதல்களை எண்ணித்துக்கித்தும் வந்ததற்கு கணக்கில்லை. ஆனால்கடைசியாய் என்னுடைய மனோரதம் நிறைவேறுங் காலம்வந்தது. அப்பொழுது என் அபேக்ஷைப்பிரகாரம் வீடு கட்டிமுடிந்தது.

இப்புதிய வீடு எனக்குச் சித்திப்பதற்குமுன் நான் செய்துவந்த பயங்கரமான துஷ்கிருத்தியங்களை உங்களுக்குச் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆனால் என்னுடைய அனுபவத்திலிருந்து உங்களுக்கறிவுண்

டாகும்படியாகச் சிலவற்றைச் சொல்லுகிறேன், நான்செய்த குற்றங்களெல்லாம் மிகவும் கெட்டதும் வெகுநாளாக நான் செய்துவந்ததும் யாதெனின் எனது குற்றங்களையெல்லாம் மற்றவர்கள் பேரில் சாட்டிவந்தேன் என்பதே. முதலாவது என்வீட்டின் வமிசத்தைபற்றிக் குற்றம் சொல்லிக்கொண்டிருந்தேன், பின்னர் என்னோடு வசித்த வேலைக்காரர்கள் பேரில் குற்றம் சுமத்திவந்தேன். ஆனால் அக்குற்றங்கள்யாவும் என்னுடையவேயென்று நீங்களே காண்பீர்கள். எதார்த்தத்தில் அவைகள் யாவும் என்னுடையவைகளாகவே இருந்தன.

நான் எப்போதும் வெளிநோக்குடையவனா யிருந்தேனே யொழிய உள்நோக்குடையவனாக இருந்திருக்கவில்லை யென்பது உங்களுக்கே வெளியாகும். குற்றம் என்னுடையதென்பது இதுகாறும் தெரியவேயில்லை. இப்போது எனக்கு நன்றாய்த் தெரிகிறது. நான் சரியாயிருந்திருப்பேனானால் என் வேலைக்காரர்களும் சரியாயிருந் திருப்பார்களென்றும் நாங்கள் சரியாயிருக்கவே எங்கள் வீடும் சரியாய்க்கட்டி முடிந்திருக்குமென்றும் நான் அறிகிறேன். "பட்டறி" என்னும் ஓர் பழமொழியுண்டு, அது போலவே நானும் பலதடவை பட்டுப்பட்டே தேர்ந்தேன். இதுநிற்க, நான் வெகுநாளாகக் கோரியிருந்தபடி கட்டி முடிந்திருந்த புது வீட்டில் என் வேலைக்காரர்கள் சகிதம் பிரவேசிக்குங்காலம்வந்தது. அத்தனை நேர்த்தியான வீட்டில் புகச்சம்பவித்ததானது எனக்குச் செருக்கையும் அகங்காரத்தையுமுண்டுபண்ணிற்று. அதனால் எனது பிரவிர்த்திகள் யாவும் சுயத்தை அபேக்ஷித்தேயிருந்தன. அவைகளைப்பற்றி உங்களுக்குச் சொல்ல எனக்கு இலச்சையாயிருக்கிறது. ஆயினும் ஒருவாறு சொல்லத் துணிகிறேன். அதாவது எனக்குண்டாயிருந்த சுயாசய, அகங்காராதி குணங்களுக்கேற்ப நான் ஒரு பெரிய பராக்கிரமமுள்ள அரசனைப்பற்றிக் கேள்வியுற்றிருந்தேன். அவனைப்பார்க்கிலும் மேலானவனாக என்னைமதித்துக்கொண்டு அவனைப்பற்றி அதிக்கிரமமும் நிந்திப்புமான எண்ணங்களை என் மனதிற்கொண்டேன். இம்மட்டில் நின்றிருப்பேனானால் அதிகக் கெடுதலொன்றும் சம்பவித்திருக்கமாட்டாது. ஆனால் நான் அம்மட்டில் நில்லாமல் என் மனதிலுள்ள அதிக்கிரமமும் நிந்திப்புமான எண்ணங்களை மற்றவர்களும் நம்பும்படிக்குப் பலவந்தஞ்செய்யத் தீர்மானித்து அவ்விதம் நம்பாதவர்களை ஹிம்சைசெய்துவந்தேன். அவர்களை ஹிம்சைசெய்து விட்டதாய் எனக்கு எண்ணமேனுமிருந்தது. எப்போதும் துக்கத்தை அநுபவிக்கத்தக்க ஒரு இடத்திற்கு அவர்களை யனுப்பிவிட்டதாகவும் எண்ணிக்கொண்டேன்.

எல்லாரும் ஒரேவிதமாய் நம்புவது அசாத்தியமானதினாலும் நாங்கள் எல்லாரும் உண்மையினின்றும் வெகு தூரத்திலிருந்ததினாலும் ஒருவரையொருவர் வருத்துதல் வெகுகாலம் நடந்துவந்தது. ஆனால் ஒருகாலத்தில் ஹிம்சையானது நின்றுவிட்டபோதிலும் ஒவ்வொருவரும் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிடச் சுவாதீனமில்லாமலே இருந்தது. என் ஆசிரிதர்களாய் முன் எனக்குத் தோன்றியவர்கள் குணங்களேயென்று நான் அறிந்தபொழுதுதான் எனக்கு உண்மை உதயமானதாகச் சொல்லலாம். அதுமுதல் அவர்களிலொவ்வொருவரையும் எனது மேல்மேடைக்குத் தனித்தனி அழைத்து, என்னுடன் உட்காரச்செய்து, சம்பாஷித்து மேல் நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி ஆலோசித்துவந்தேன். அவர்களைப் பயிற்சிசெய்து படிப்பிக்கவேணுமென்று எனக்கு அறிவுவந்தபொழுது மேல்வீட்டில் என்னோடு சமமாயிருக்கத்தக்கவிதத்தில் அவர்களுள் இரண்டு பேர்களை மேன்மையுறச்செய்தேன். இவ்விதம் செய்தது நான் இப்போது வசிக்கும் வீட்டிலிருந்துதான்.

"நான் வசித்த வீடுகளுக்கெல்லாம் இதுவே சிலாக்கியமானது" என்று நான் முன்னே சொன்னதின் தாத்பர்யம் இப்பொழுது உங்களுக்கு நன்றாய் விளங்கியிருக்கும். இந்த வீட்டிலேயே எனக்குத் திருப்திவந்துவிட்டதென்றாவது இனிமேல் வேறு எவ்வித அபிவிருத்தியும் இருக்காதென்றாவது நீங்கள் எண்ணாதேயுங்கள். இப்போது என்றால் பயிற்சிசெய்யப்பெற்றிருக்கிற இரண்டு "ஆசிரிதர்க"ளின் (இனி அவர்களைச்சகோதரர்களென்று அழைப்பேன்) உதவியைக்கொண்டு நான் என்வீட்டின் பட்டகசாலையில் ஒளி உண்டுபண்ணும் சக்தியைப்பெற்றேன். இவ்வெளிச்சத்தினால் நான் உள்நோக்குடையவனாகி குற்றங்களெல்லாமிருக்குமிடம் கண்டேன். படிப்பிக்கப்படாத மற்றையர் இருக்கும் கீழ்க்கட்டுக்கு இனி ஒருபோதும் போகக்கூடாதென்று தீர்மானித்திருப்பதுந்தவிர அவர்களை என்னோடும் அவருடைய பழைய சிநேகிதரோடும் சமமாயிருக்கச்செய்யும் நிலைமைக்குக்கொண்டுவரவேணுமென்றும் கருதியிருக்கிறேன். அவர்களைப்படிப்பித்து உயர்த்தத்தக்க பிராணியுள்ளவனாகும்பொருட்டு என்னை மேன்மையான நிலைமைக்குக்கொண்டுவர இனி மனப்பூர்வமாய்முயற்சிப்பேன். நாங்கள் எழுவரும் ஒருவருக்கொருவர் செய்யவேண்டும் கடமையை உணர்வதற்குமுன் அநேக வீடுகளில் வசித்துவந்ததுபோலவே இனிமேலும் அநேக வீடுகளில் வசிப்போமென்றும் குற்றமற்றவீட்டை யடையும்பரியந்தம் எங்களுடைய வீடுகளிற் சீர்திருத்தம் செய்துகொண்டே வருவோமென்றும் நம்புகிறோம். பிற்பாடு நாங்கள் "ஒருபோதும் வெளி

யே போகமாட்டோம்". ஒரு நிலைமையான உடைமையாய் அழகிய படமொன்றை நாங்கள் உடைத்தாயிருக்கிறோம். அதற்கு ஏகசகோதரபாவம் என்று நாமமிட்டிருக்கிறோம். எப்பொழுதும் நாங்கள் அதை வகிப்போம். நாங்கள் வெளியில்போகும்பொழுது அத்துடன் சென்றும், திரும்பும்பொழுது அத்துடன் திரும்பியும் வாழ்ந்துவருவோம். பேரொளி வீசத்தக்க எமதுபட்டகசாலையிலுள்ளசுவரின்மேல் அதைத்தூக்கியிருப்போம். அதைப்போல படங்கள் வரைந்து எங்களுடைய அயலார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரதிகொடுக்க முயற்சிப்போம்.

நாங்கள் நம்புநிறதைக்கொண்டாவது நம்பாததைக்கொண்டாவது அயலானை உபத்திரவிப்பது எங்களுடைய கொள்கையன்று. எங்களுடைய நல்ல முயற்சியின் பயனை பிறர் பார்க்கத்தக்க விதத்தில் எமது ஒளியைப் பிரகாசிக்கச்செய்யத் தீர்மானித்திருக்கிறோம். எமது தெய்வீககுரவரொருவரின் உபதேசமொழியாகிய "சிறு குழந்தைகளே! ஒருவரையொருவர் நேசியுங்கள்" என்பதை நாங்கள் பினபற்றப்பார்க்கின்றோம். நாங்கள் பசியுடையவர்களுக்கு அன்னமளித்தும் ஆடையற்றவருக்கு உடையளித்தும் நோயாளிகளைப் பராமரித்தும் கைதிகளை ஆறுதல்செய்தும் நேசிக்கப்பார்க்கிறோம். சத்தியம் அறிவு என்பவைகளையே விருந்தாக வூட்டி, பெரும்பாட்டையிலும் சந்து பொந்துகளிலும் சென்று, அறிவீனர்களைக்கண்டு, அவரையழைத்து, எங்களோடு ஞானம், கல்வி, சக்தி இவைகளைப்பகிர்ந்துண்ணும்படி வற்புறுத்துவோம்,

[இச்சிறுவிஷயம் 'யூனிவேர்ஸல் பிரதர்ஹூட்' என்னும் இங்கிலீஷ் பத்திரிகையினின்றும் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது.]

சண்முகம்பிள்ளை.

## ஜோதிடமயல் நீக்கம்.

ஒருவருக்கும் வாழ்க்கைக்கு வேண்டியவைவற்றில் யாதொருகுறைவும் சோராதிருக்கும் வண்ணமும் கடவுளின் நியமங்கட்குக் கீழ்ப்படிந்து ஒழுகுவதாலுண்டாகும் பேரானந்தம் யாவரும் எளிதில் அடையும் பொருட்டும் எல்லாமாந்தர்களும் வெற்றி, தோல்வி, சுயநயம் என்பவைகளைப் பற்றி யுண்டாகும் எண்ணங்களை ஒழித்து, கடவுளின் உண்மைக்கருத்தினை நாடியுணர்ந்து, உலக நன்மைக்காகப் பாடுபடுவோர்களாக, இஃதே மனிதருடைய முழுக்கடமையாயிருக்கின்றது.

ஆனால் மாந்தரோ. யாதொரு பிரயோஜனமும் தராத காரியத்தில் உழலுகின்றனர். ஆகாயமோ, வருங்கால துக்கசம்பவங்களை முன்னுணர்த்தும் வார்த்தைகளால் நிரப்பப் பட்டிருக்கின்றது. சிலர் ஜோதிட சாஸ்திரத்தை ஆதாரமாகக் கொண்டும் சிலர் தமக்குத் தோன்றியவாறும் மேலுண்டாகும் சம்பவங்களைப்பற்றி முன்னக் கூட்டியே தெரிவிக்கின்றனர். அவையாவும் தோற்றத்தில் பலவிதங்களாயிருந்தபோதிலும் காரியத்தில் ஒன்றாயிருக்கின்றன. அவைகள் கொடிய துக்கசம்பவங்களைப் பற்றிய பயத்தை உண்டு பண்ணுவனவாயும், மனுஷ்ய ஜாதிமுழுவதையும் முக்கியமாய் இததேசத்திய ஜனங்களை மிக்க துன்பத்திற்காளாக் குவனவாயுமிருக்கின்றன. சிலர் துஷ்டர்கள் மாத்திரம் நாசமடைவார்களென்றும் சிஷ்டர்கள் தப்பிக்கொள்வார்களென்றும் கூறுகின்றனர். மற்றையர் ஆகாயத்தில் மிதக்கும் அண்டங்களிடிந்து விழுந்து உலகமுழுவதும் நசித்துப் போமென்கின்றனர். வேறுசிலர் உலகத்தில் வர்ணாசிரம தர்மங்களும் இராஜரீக தாமங்களுமே கெட்டுப்போகுமென்கிறார்கள். சாதாரண ஜனங்கள் குழப்பமடைந்தவர்களாய் எவ்வழிதிரும்புவதென்றும் எதை நம்புகிறதென்றும் அறியாமல் மயங்குகிறார்கள்.

அப்பேர்ப்பட்டவர்கள் சற்றுநின்று ஆலோசிக்கட்டும். மேல் சம்பவிக்குங் காரியங்களை கடவுளன்றி வேறு யாரும் அறியவல்லாரல்லர். யாதொன்று எக்காலத்தேனும் எவ்விடத்தேனும் நடப்பினும் அது அவராலேயே நடப்பிக்கப்படுகின்றது. அவரையன்றி யாதொன்றையும் ஒருவர் அறியவோ செய்யவோ முடியாது. அவருடைய உத்தேசங்களையும் செய்கைகளையும் மனிதன் கண்டுபிடிப்பதெவ்வனம்? சுற்றிலும்பாருங்கள். ஒன்றிலும் மனிதனுக்கு நிச்சயஞானமின்றென அறிவீர்கள். ஊகமில்லா நினைவுகளும் விவேகமில்லா எண்ணங்களுமே மனிதனுடைய இருதயத்தில் குடிகொண்டிருக்கின்றன. த்வேஷவாத புத்தியினால மாந்தர் தமது கொள்கைகளை ஸ்தாபிக்கவும் மற்றவர்களுடைய கொள்கைகளை நிஷேதிக்கவும் பிரயாசைப்படுகிறார்கள். உண்மையையோ காட்டத்தக்கதும் அகத்திருந்து மறைவின்றிப்புறப்படுவதுமான ஓதியுணரா ஞானம் மனிதனிடத்தில்லை, எதார்த்த ஞானமன்றி அறிந்ததாகப்பாவிக்கும ஞானமே ஜனங்களுக்குள் மிகுதியாயிருக்கின்றது. அதிலிருந்துதான் பேதமும் ஐக்கியமின்மையுமாகிய வற்றாநதிப்பிரவாகம் உண்டாகின்றது.

மனிதன் ஜனிக்குமுன்னர் என்னதெரிந்திருந்தானென்று ஆலோசித்துப்பாருங்கள். தான் இருந்ததாகவே அவனுக்குத்தெரியாது. ஆயின் கடவுளையும் சிருஷ்டியையும்பற்றிக்கேட்பானேன். அறியாமையோடேயே

மனிதன் பிறந்து அறியாமையோடேயே இறக்கிறான். அவன் துவக்கத்தில் அ-ஆ-இ முதலிய அக்ஷரங்களைப்படிக்க ஆரம்பித்து, நாளடைவில் பண்டிதர், பாதிரி, மவுல்வி என்னும் பட்டங்களை வகித்து, தான் அறிவில் மிக்கவன்போன்று நடிக்கிறான். பிள்ளைபோன்று மனிதன் கேட்டதையே சொல்ல அறிகிறான். தான்கேட்ட அளவே, பிரபஞ்சத்தின் மூலகாரணப்பொருள் ஒன்றென்றோ பலவென்றோ இயற்கை யென்றோ சூன்யமென்றோ ஸ்தாபிக்கமுயலுகிறான். ஆனால் தானேயுண்டாகும் சுயஞானத்திற்கும் மனிதனுக்கும் வெகுதூரம். அத்தகைய ஞானம் மனிதனுக்குண்டாயிருக்குமேல் அவன், தான் மதசம்பந்தமாய்ச் செய்யும் கொடிய ஹிம்சைகளாகிற ஜெபவிருதங்களை வேதத்தின் பாதங்களில் காணிக்கையாகச் சமர்ப்பியான். சகல ஜீவராசிகளையும் தன்னுடைய ஆத்மாவாகவும் கடவுளாகவுமே பாவித்தொழுகுவான். இத்தேசத்திய மகான்கள் சொல்லியிருக்கிற "சமதிருஷ்டி" என்னும் குணமொன்றுமே ஞானத்தின் எப்பொழுதுமாறாத அடையாளமாயிருக்கின்றது. தன்னுடைய எதார்த்த சொரூபம் இன்னதென்றும் அடுத்த நிமிஷத்தில் என்ன சம்பவிக்குமென்றும் மனிதன் தெரிந்து கொள்ளாதிருந்தும் ஆகாயத்தின் மூகட்டை எட்டினதுபோலும் சமுத்திரத்தின் ஆழத்தை அளந்ததுபோலுமுள்ள வார்த்தைகளைச் சந்தோஷமாய்ப் பேசுகிறான். கடவுள் காட்டுகிறவைகளையே தனக்குக் காணக்கூடுமென்பது அவன் புத்தியில் நுழைகிறதில்லை. ஒவ்வொருவனும் சொப்பனங்காணும் மற்றவர்களுடைய சொப்பனங்களை அறியாமல்தான் காணும்சொப்பனத்தையே உண்மையெனக்கருதுகிறான். ஆனால் ஒவ்வொருவனுக்கும் அவனவன் சொப்பனத்தைத் தோற்றுவிக்கும் கடவுள் சகல சொப்பனங்களையும் அறிகிறார். சொப்பனங்காண்பவரெல்லாரும் விழித்தபின் ஒன்றாகவே பார்க்கிறார்கள். நானாவித சொப்பனங்களும் மறைந்துவிடுகின்றன. விழித்த திருஷ்டி ஒன்றுமே சேஷிக்கின்றது. சுயமே உண்டாகும் ஞான ஒளியால் யாவர்க்குமுண்மையாயிருக்கும் சத்தியம் ஒன்றுமே மிஞ்சி, பேத அபிப்பிராயங்கள் யாவும் ஓடுகின்றன.

ஆகவேண்டுவன வெல்லாவற்றையும் ஜோதியே தன் தோற்றமாகவுடைய சர்வ வியாபகப்பரம்பொருள் ஒன்றுமே அறிகிறது. ஒவ்வொன்றும் அவருடைய கட்டளைப்படியே நடக்கின்றது. அவர் யாதொன்று அறியப்படவேண்டுமென்று சங்கற்பிக்கிறாரோ அதைத்தவிர மற்றொன்றை அறியவோ, செய்யப்படவேண்டுமென்று அவர் சங்கற்பிக்கிறதைத்தவிர மற்றொன்றைச்செய்து முடிக்கவோ யாருக்கும் வலிமையில்லை.

குறித்தகாலத்தில் மரங்களிலிருந்து இலைகள் உதிர்கின்றன. ஜீவர்கள் எல்லாருங்கூடி அந்த மாற்ற உத்தேசிக்கின், என்ன பலிதமுண்டாகும்? பகவானானவர் பிச்சைக்காரனுடைய தலையில் கிரீடத்தைத்தரிக்கின்றார். அதற்குமாறாக ஒருவரும் ஒன்றும் செய்யக்கூடவில்லை. அது போலவே அரசனுடைய நெற்றியிலிருக்கும் கிரீடத்தைத் தாம் குறித்த காலத்தில் தம்முடைய உறுதியான கையினால் பிடுங்கிக்கொள்ளுகிறார். அதை யார் தடுக்கக்கூடும்? ஏனெனின் அவரே எல்லாமாயும் தனித்துமிருக்கின்றார். அவரையன்றி வேறே யாருமிலர். மகமதியர்களாக வேடம் தாங்கி அகங்கரித்திருந்த ஆரியர்களைத் தாழ்த்தினவர் அவரே. பிருத்தானியர்களாக வேடம்பூண்டு கொடிய மகமதியர்களுடைய கையினின்றும் செங்கோலைப்பிடுங்கினதும் அவரே. பிருத்தானியர்களுடைய இருதயத்தில் எவ்வளவு காலம் இராஜநீதி வசிக்கின்றதோ, அவர்களுடைய கண்களைவிட்டு "சம்திருஷ்டி" எவ்வளவுகாலம் நீங்கவில்லையோ அவ்வளவுகாலமும் அவராளுகை நிலைபெறும். நீதிதவறிய ஆளுகையினின்றும் உலகத்தை இரக்ஷிப்பதற்குக் கடவுள் தரிக்கும் வேடங்கள்பல. அவரை விரோதித்து ஒன்றும்செய்யமுடியாது. இஃதேயாராலும் அசைக்கக்கூடாதவிதத்தில் நிலைநிற்குமுண்மை.

கடவுளின் அளவுகடந்த சக்தியையும் மனிதனுக்குக் கிஞ்சித்தும் சக்தியில்லாமையையும் கவனித்தால் மனிதனுடைய வருங்கால திருஷ்டி பயனற்றதென்பதற்கையமென்னே? ஆனால் கடவுளுக்கோ எல்லாம் சாத்தியம். மிகப்பெரியதும் ஆச்சரியத்தைத் தரத்தக்கதுமான காரியங்களைச் செய்து முடிக்க, உபயோகமற்ற பலயீனமான மனிதன் அவருடைய கருவியாயிருக்கின்றான். கடவுளினால் செய்யப்படும் காரியங்கள் சத்தியத்தை நேசிப்பவர்களுடைய இருதயங்களில் பக்தியையும், வியப்பையும், ஆனந்தத்தையுமுண்டுபண்ணுகின்றன.

சகல பிராணிகளுக்கும் ஒளி கொடுக்கும் பேரொளி கடவுளே. அத்தகைய ஒளியாயிருந்து மனிதருடைய அறிவையெல்லாம் அவர் ஆளுகிறார். நக்ஷத்திரமுதலியவைகளைக் கணித்து மேல்நடக்கும் சம்பவங்களைக் கண்டுபிடிப்பவரும் அவரே. முன்கூட்டியே தாம் தெரிவித்தவைப்பின்னர் சம்பவிக்கச்செய்வதும் அவரே. பகவானிடத்திலன்புசெலுத்தும் பக்தர்களின் வாயினின்றும் வரும்சொல் தவறுகிறதில்லை. தீர்க்கதரிசிகளின் வாக்கியங்கள் பகவானிடத்திலிருந்தே வருகின்றன. தாமே உலகத்திற்குக் கர்த்தாவென்று எல்லாரும் உணரும் பொருட்டும், தமது நியமங்களுக்குக் கீழ்ப்பட்டு மனிதர் ஒழுகும் பொருட்டும் அவர், குறித்த காலங்களில் அவைகளை நிறைவேற்றுகின்றார். ஜோதிடசாஸ்திரம் பிறந்ததும் அவரிடத்திருந்தே. அவரே அதன்வண்ணம் சம்பவிக்கவும் செய்கிறார்.

(இன்னும் வரும்.)

பரமஹம்ஸ சிவநாராயண சுவாமி

# பக்தி.

---

பக்தியென்பது பொதுவகையானோக்குமிடத்து, அன்பு என்ப் பொருள்படும். அவ்வன்பானது தான் நிகழ்தற்குரிய பொருள்களின் தன்மைக்கேற்பப் பலவகைப்படக் காண்கின்றோம். எவ்வாறெனின், அடிமையிடத்துண்டாவதாய வன்பினால் தயையும், மனைவியிடத்துண்டாவதாய அன்பினால் காதலும், மக்களிடத்துண்டாவதாய அன்பினால் பாசமும் (ஆர்வமும்), தோழனிடத்துண்டாவதாய அன்பினால் நேசமும் (நட்பும்), தாய், தந்தை, குரு ஆகிய இம்முக்குரவர்களிடத்துண்டாவதாய அன்பினால் வணக்கமும (கீழ்ப்படிதலும்), கடவுளிடத்துண்டாவதாய அன்பினால் பக்தியும் தோன்றுவது தன்மை. அவ்வவ்விடங்களிலும் பற்றிநிற்கும் மனம் ஒன்றேயாயினும், பற்றப்படும் பொருள்களின் தகுதிக்கேற்ப உள்ளநெகிழ்ச்சியும் மனோபாவனைகளும் வேறாகிப்பலவேறுந்தொழில்களையியற்றாநிற்கின்றது. அன்புள்ளவனைக்காண நேருழி காணுங் கருவியாகிய அக்கண் தன்னுள் நீர்சுரந்திடுதலும், சுவையுள்ள பொருளைக்காண நேருழி சுவைக்குங்கருவியாகிய நாவு (நாக்கு) தன்னுள்நீர்சுரந்திடுதலும், அழகிய விள மகாரை (மக்களை) மெய்யாரத் தழுவுழி பரிசவுணர்ச்சியுடைய உடலம் மயிர்ச்செறிவுறுதலும், இதுபோன்றனபிறவும் மேற்காட்டிய விடயத்திற்கு அநுபவசித்தமான உண்மைச்சான்றும். நிற்க, இத்தகைய அன்பு பலவற்றுள்ளும் சிறந்தது கடவுளிடத்துப் பாராட்டப்படுவதாய பக்தி என்பதேயாம். அப்பக்தி ஆசான் முகத்தால் தோன்றப்படுவதாகும். அவ்வாசானும் தந்தையினாலடைவிக்கப்பட்டு, அத்தந்தையும் தாயினாலுணர்த்தப்படல் வேண்டுங்காரணம்பற்றியே தாய், தந்தை, குரு முதலிய மூவரையும் முக்குரவரென ஆன்றோர் உபசரித்தபடியாம். இனி அப்பக்தியினால் ஞானமும், ஞானத்தினால் மோட்சமும் அடைதற்பாலனவாம். அப்பக்தியும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பகுதியினையுடையதாய், முறையே அதன்வழி சாலோக, சாமீப, சாருப, சாயுச்சியம் என்னும் நாற்பதவிகளையும் அடைவிக்கும். ஒன்றினைவிட மற்றொன்று சிறப்புடைய தென்பதாய் கீழிட்ட மூன்றுபாதங்களையுங் கைவிட்டு நான்காவதாகிய மோட்சமென்னும் சாயுச்சியத்தினைத்தரும் ஞானத்தினையே முதற்கண்பெற முயல்வோமெனின் அது கூடாது. ஒன்றைவிட மற்றொன்று எத்துணைச்சிறப்பினவோ, அத்துணைமேலிட்ட ஒவ்வொன்றிற்கும் கீழிட்டபடிகளின் சம்பந்தம் இன்றியமையாததும் மூலகாரணமுமாம். இச்சம்பந்தம் தோன்றவே,

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே"

எனச் சைவத்திருவாளராகிய ஸ்ரீ தாயுமான சுவாமிகளும் திருவாய்மலர்ந்தருளினர். அரும்பினால் மலரும், மலரினால் காயும், காயினால் கனியும், எப்படி ஒன்றற்கொன்று சிறப்பினவும், ஒன்றற்கொன்று சம்பந்தமும், ஒன்றில்வழி (ஒன்றில்லாவிடத்து) மேலிட்ட மூன்றுமிலதாமோ, அவ்வாறே சரியையினாற் கிரியையும், கிரியையினால் யோகமும், யோகத்தினால் ஞானமும், ஒன்றினைவிட மற்றொன்று சிறப்பினவாயும், ஒன்றற்கொன்று இன்றியமையாச்சம்பந்தமுடையனவாயும், ஒன்றில்வழி ஏனைய மூன்றுமிலதாகவு முடிகின்றன.

ஆதலின், சரியையாதி நாற்பாதங்களையும் ஒருவன் முறையே அநுட்டித்தாலன்றி முத்தியையடையப்பெறான். அச்சரியையாதிகளையநுட்டிப்பதற்கு தெய்வமுண்டெனும் நம்பிக்கையும் அதன்வழி மெய்ப்பக்தியுமே முதற்காரணமாம். அப்பக்தியே முத்திக்குவித்தாயிடுதலின் அஃதில்வழி எவர்க்கும், என்ஞான்றும், எப்பயனு மெய்தற்கின்று. அத்தகைய பக்தி யொருவருக்குத் தன்னிச்சையாற் கிடைப்பதோ ஆசானாதியராற் கிடைப்பதோவெனில், இருவகையாலுமன்று. ஆசானாதியர் துணைக்காரணமன்றி முதற்காரணமாகார்.

பல்லூழிகாலம் பயின்றரனையர்ச்சிக்கில்
நல்லறிவு சற்றேதரும்"

எனும் எமது ஔவைபிராட்டியாரது அருமைத் திருவாக்கின்படி, முன்னைப் பல பிறவிகளிற்செய்த நல்வினைகளினாலேயே இப்பிறப்பில் நமக்கு அப்பக்தி ஜனித்தல்வேண்டும். ஆதலின், உண்மைப்பக்தியில்லாதசிலரும் உலகவழக்கினையொப்பநடக்கவிரும்பி, தானாதியறங்களும், விரதாதிகளும், தெய்வாராதனை முதலிய கிரியைகளும் இயற்றலியல்பு. அன்னார்புரிவதனைத்தும், மீட்டும் மீட்டும் பிறவிக்கே ஏதுவாமென்றும், பிறவிக்கேதுவாகிய அக்கன்மமும் மனங்குவிந்தியற்றப்படுவதொன்றன்றெனவும்புறக்கணித்திகழ்ந் துரைப்பாருமுளர். அவ்வாறவர் கூறுங்கூற்றும் கொள்கையும் உண்மையேயெனினும், அவ்வவர் பரிபாகத்தினை நோக்குழி, ஞானிகட் கொப்பப்படுவதொன்றினை மற்ற ஏனையோரிடத்துக் கூறுதல் குற்றமுடைத்தே. ஏனெனில், பக்தியில்லாமல் அநுட்டானம் பற்றியேனும் கீர்த்தியை விரும்பியேனும் ஒருவர் நற்செய்கையைப் புரிவாரெனினும், அந்நல்வினை செய்யச்செய்ய அதன் பயனாக அச்செய்கையினிடத்து அகத்துள்ளன்பும் பிறபட்டுதித்தலியல்பு; அல்லது மறுபிறப்பிலேனும்

புண்ணிய வினைகளினூக்கப்பாடுடையராய்ப் பிறத்தல் கூடும். அவ்வித ஊக்கத்தால் ஒழுக்கமும், ஒழுக்கத்தால் நல்லோரினது கேண்மையும் ஒன்றின்வழி மற்றொன்றாய்ப் போதரலெளிதாம். குறைந்தமாற்றுள்ள பொன்னினைப் புடம் பல இட்டுத் தங்கமாக்குதல்போல் மிக்க அபக்குவசீவர்களையும்பற்பல பிறவிகளிற்றோற்றுவித்தே அவர்களைத்தூயராக்குதல் பதியாயுள்ள கடவுளின்பாரம். உயர்ந்த தங்கமாகியதை யுணர்ந்தபின் அதனைமீட்டும் புடத்திட எவரும்விழையா (விரும்பா) வாறுபோலும் உண்மை ஞானம் பெற்றுப்பரிபக்குவம்வாய்ந்த ஜீவர்க்கு ஜனனாபேட்சை இலதாகின்றது. இவ்வுண்மையினால் ஞானிகள் பிறப்பை யிகழ்ந்து மறுத்தலும், அஞ்ஞானிகள் தமக்கு ஞானம் வருதற்பொருட்டு பல நற்பிறவிகளையடைய விழைவதும் நீதியே. இவ்வுண்மை கருதியே ஆன்றோர் பலரும் உலகத்தவர்க்கு எண்ணிறந்த விரதங்களையும், பூசைகளையும், நோன்புகளையும் ஏற்படுத்தி அவைகளில் நம்பிக்கை போதா பற்பல உதாரண நூல்களும் (கல்பங்கள்), பற்பல காதைகளும் இயற்றி, ஆங்காங்கு ஆலயங்களும், திருவிழாக்களும் பிரதிட்டித்து, நடத்தி அவையழியாது நிலைநிற்றற்பொருட்டு சிலாசாசன முதலிய பற்பல பிரபல ஆதாரங்களையும் இப்பரதகண்டத்திற்றாபித்தனர். ஆதலின், நல்வினையொருவராற்றுங்கால், அன்னார்க்கதில் மேன்மேலும் ஊக்கம் வருவித்தலே நல்லோர் கொள்கையன்றி, அன்னார்க்கூக்கங் குன்றுறவிகழ்தலன்று. இது நிற்க, நாம் இதுவரையில் பக்தி யின்னதென்றும், அப்பக்தியை இன்னின்ன உபாயங்களால் அடைதற்குளதென்றும், அப்பக்தியினால் சரியையாதி நாற்பாத அநுட்டானங்களும் அதனுள் நான்காவதாகிய ஞானத்தினால் முத்தியும் அடையற்பாலதென்றும் பொதுவகையாற் கூறினோம். இனி அத்தகைய பக்திக்குரிய கடவுள் ஒருவரேயாயினும், பற்பல மதத்தர்களின் கொள்கைகளின்படி பற்பல பெயர்களாற் பக்திபண்ணுதலே உலகத்தியற்கை. அதனால் விரோத புத்தி மேற்பட்டு தம்மைத்தாமே புண்படுத்திக்கொள்வதும் தொன்றுதொட்டுள்ளதொன்றே.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகியாங்கு
மாதொருபாகனார் தாம்வருவர் * * *."

எனுந் திருச்செய்யுளின்படி, யார் யார் எவ்வெப்பெயராற் கடவுளைப் பக்தி செய்யினும், அவ்வவர்கட்கு அவ்வப்பெயரால் அவ்வப்பாவனா வடிவமாய் முன்னின்றருள்பவன் உமையோர்பாகமுடைய பசுபதியேயென்பது சைவசமயிகளுடைய துணிபாதலின், அன்னார்க்கு யாவுமுடன்

பாடேயாம். அவ்வாறன்றிப் பேதமைப்பாட்டினால், கடவுள் இரண்டு மூன்றெனவும், அவற்றுள் தாங்கள் குறியீடு தந்துபசரித்தும் பெயர்க்குரியவரே முதற்கடவுளெனவும் மயங்கிப் பிறமதத்தாரின் கடவுட்குறியீட்டுப் பெயர்களை யிகழ்வோர், (உண்மையிற் கடவுளொன்றும் பெயர் பலவுமாதலினால்) தமது கடவுளையே தாம் இகழ்ந்தவர்களாகி ஆழ்நரகிற் றள்ளுண் டலக்கணுறுவர். இப்பொருள்களை யுள்ளிட்டே "தெய்வமிகழேல்" என சைவசிகாமணியாகிய ஒளவைப் பிராட்டியாரவர்கள் ஓர் சொல்லிற் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தனர். ஆதலின் அம்மூதுரையை யாமனைவரும் சிரத்தேற்று உய்யுநெறி பெறுவோமாக.

அசலாம்பிகையம்மாள்.

---

# மோக்ஷோபாயம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தம் நான்கினுள் மேலானதாகிய வீட்டை அதாவது மோக்ஷத்தை ஒவ்வொரு மனிதனும் இச்சிக்கின்றான். ஆனால் மோக்ஷம் இன்னதெனவும் அதனை நேராயடையுமார்க்கம் இன்னதெனவும் அறியாமலே அவனதை யடையக் கருதி தப்புவழிகளிலும் சுற்றுவழிகளிலும் பிரவேசித்து மோக்ஷத்தின் திசைகாணாது திகைத்துத் திண்டாடுகின்றான். வேதத்தில் "மோட்சமென்பது துக்க நிவிர்த்தி சுகப்பிராப்தி" என்று பரிஷ்காரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. மோக்ஷத்தைப் பலமதஸ்தாகள் பலவிதமாய்க் கூறினும் அவர்களெல்லோரும் மோக்ஷராச்சியத்தில் சுகமேயுள்ளதெனவும் துக்கமென்பது இல்லையாதெனவும் சொல்கின்றனர். ஆகையால் அவர்கள் சொல்வதும் வேதத்தின் கருத்துக்குவேறன்று. சுகசொரூபமாகிய இம்மோக்ஷத்தை யடைவதற்கு மார்க்கங்கள் பலவுளவேனும் அவற்றுளெல்லாம், சித்த சுத்தியையுண்டுபண்ணக்கூடிய நிஷ்காமிய கருமமும் (அதாவது பலத்தை விரும்பாது செய்யுங் கருமமும்) கடவுளுடைய ஸ்வரூபத்தை யுணர்த்தக்கூடிய ஞானத்தையுண்டுபண்ணத்தக்க வேதாந்த விசாரணையுமே சிறந்தவைகளாம். மநுதர்ம சாஸ்திரத்தில்,

"உபநிஷத்து முதலிய வேதாந்தங்களைக் கிரந்தமூலமாக அதன் பொருளுடன் அப்பியசிப்பது, பரிசுத்தியின்பொருட்டு [1] பிராஜாபத்திய

---

[1] பிராஜாபத்திய கிருச்சிரம்.—ஒரு நாள் இலகுவான பதார்த்தம் சாப்பிட்டு மறுநாள் புசிப்பில்லாமலிருந்து செய்யும் ஓர் தபவிரதம்.

கிருச்சிரத்தை யனுஷ்டிப்பது, பிரம (கடவுளுடைய) சுவரூபத்தையறிவது, இந்திரியங்களை விஷயத்தில் சம்மந்தப்படாதபடி அடக்குவது, ஒரு பிராணியையும் ஹிம்சைசெய்யாமலிருப்பது, ஆசாரியனுக்கு சிசுருஷை செய்வது, இவைகளெல்லா மோக்ஷத்துக்குரியமேலான சாதனங்கள்" எனவும்,

" இவ்வாறு வித கருமங்களுக்குள் வேததத்துவார்த்தத்தை யறிந்து தேஹாத்தும ஸ்வரூபத்தை யறிகிறதான யாதொரு பரமார்த்த ஞானமுண்டோ, அதே இம்மையிலும் மறுமையிலும் எப்போதும் சுகத்தைக் கொடுக்கிறதென்று அறியத்தக்கது " எனவும்,

" எவன் ஜங்கமஸ்தாவர ரூபமான சகல பூதங்களிடத்திலும், பரமாத்தும (கடவுளுடைய) வாசத்தையும், அப்பரமாத்துமாவி னிடத்தில் பரமாணு முதலிய சகல சேதனாசேதனங்களுடைய வாஸத்தையும், தத்துவ (உண்மை) ஞானத்தாலறிந்து, தான் செய்கிற நித்திய நைமித்தியாதி கருமங்களை பிரமார்ப்பணம் செய்கிறானோ, அவன் ஸ்வயம்பிரகாசமான மோக்ஷ ஸாம்பிராஜ்யத்தையடைகிறான்" எனவும், பிரமகீதையில்

"இன்னதெனுமற்றன்னிடைக் கண்டதென்னை யெப்பொருளினுங் காணும்
அந்நிலையடைந்தாலவன் பிரமத்தையடையும் வேறொன்றிலடையான்"

எனவும், கைவல்லிய நவநீதத்தில்

"ஆனபுண்ணிய மீசுரார்ப்பணஞ் செயின சசிபோஞ் சுசியாகு
மானதம்பினை விசாரித்து ஞானத்தை மருவுமென்றறிவாயே" எனவும்

கூறப்பட்டுள்ளன. நண்பர்களே! நாம் பெறுதற்கரிய மானிட ஜென்மத்தைப்பெற்றும் அதனாலடையவேண்டிய பிரயோஜனமாகிய மோக்ஷத்தையடைவதற் கேதுவான உபாயங்களைத் தேடாமல் நமது வாணாட்களையெல்லாம் வீணாட்களாய்க் கழித்தால் மானிடராகிய நமக்கும் மற்றைய ஜென்மங்களுக்கும் பேதமென்னை? ஆகையால் நீங்களெல்லோரும் பலனை இச்சிக்காமல் சத் கருமங்களைச் செய்து கடவுள்ஸ்வரூபத்தை உபதேசிக்கக்கூடிய சத் சாஸ்திரங்களையும் சாதுக்களையுமடுத்து விசாரணை செய்து ஜனன மரண சம்சார துக்கத்துக்கேதுவான அஞ்ஞானத்தை. யொழிக்கும் ஞானத்தைப்பெற்று மோக்ஷமாகிய சுகத்தையடைவீர்களாக. அங்ஙனம் கடவுளும் அருள்புரிவாராக. சுகம்.

பரசுகம் உங்கட்கெல்லாம் பலிக்கக்கடவது.

பத்திராதிபர்,